**32. அநுமான் கதை-(1)**



அநுமான் என்பவன் காற்றுக் கடவுளின் கூறாக இவ்வுலகில் குரங்குக்குலத்தில் தோன்றியவன். இவன் கிட்கிந்தையில் சுக்கிரீவனோடு தங்கியிருந்தான். பேராற் றல் படைத்த இவன்எல்லோரிடமும் பணிவாகவும், அடக்கமாகவுந்தானி உரையாடுவான். அதனால் அனைவரும் இவனைநல்லவனென்று நயந்து கொண்டாடினர். இராம பிரான் சுக்கிரீவனுடைய நட்பை நாடிச் சென்றபோது இவனேமுன் நின்று இருவருக்குந் தொடர்பு உண்டாக்கினான். இவனுடைய பணிவு இன்னுரை முதலியன இராமபிரானுக்கும் மகிழ்ச்சியை அளித்தன. பணிவுடைமையும் இன்சொல்லுந்தான் ஒருவனுக்கு அழகை யுண்டாக்குமே தவிர அணிகலன்களல்லஎன்பது, இவ்வநுமானால் விளங்கியது.

[சொல்லாற்றல்]

(இராமாயணம்)